1967 ஜூலை 3]

திரு. தோ. மு. நல்லசாமி : சார், இந்த திருச்சி கீழ் சாக்கடைத் திட்டத்திற்காக ஆராய்ச்சி நடந்து வருவதாகச் சொன்னார்கள், நிதி உதவி கோருகிறார்கள் என்றும் சொன்னார்கள். அந்த நிதியை மானிய மாகவோ அல்லது கடனாகவோ இந்த ஆண்டே கொடுக்க நிதி ஒதுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? மு.ப. 9-30

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படவில்லை.

*** 147 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதிப்பிற்குரிய பொதுச்சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.

(அ) மதுரை நகரத்தில் பாதாள சாக்கடை விஸ்தரிப்புத் திட்டத்திற்கு மதுரை நகரவை ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிடம் கடன் கோரி விண்ணப்பம் செய்துள்ளதா?

(இ) அதை உத்திரவாதம் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, மதுரை மாநகர் வார்டுகள் பிரிக்கப்பட்டு விஸ்தரிக்கப்படும்போது, பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படாவிட்டால், தொத்து நோய்கள் வருகின்றன. ஆகவே, பாதாள சாக்கடைத் திட்டத்தை விஸ்த்தரிக்க சர்க்கார், மானியமோ கடனோ கொடுத்து அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : பரிசிலனை செய்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : புதை சார் சாக்கடைத் திட்டத்தை வற்புறுத்தி நம் மாநிலத்தில் எத்தனை நகர மன்றங்களிலிருந்து கோரிக்கை வந்திருக்கிறது? நாம் கொடுக்கப் போகும் மானியத் தொகை எவ்வளவு? அவர்களுக்கு எந்த அளவுக்குக் கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதி க்பாட்சா : மூலக் கேள்விக்கும் அங்கத்தினர் கேட்கும் கேள்விக்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் கொடுக்கலாம்.

திரு. மா. இராசாங்கம் ; சார், மதுரை நகர சபை கோரியிருக்கும் கடன் தொகையைக் கொடுக்க சர்க்காருக்கு ஆட்சேபணை இல்லை என்று நினைக்கிறேன். அதற்கு என்ன நிபந்தனை என்று அறியலாமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : சர்க்கார் கொடுப்பதில்லாமல், லைஃப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் கடன் கொடுப்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் உறுப்பினர் என்று கருதுகிறேன்.

The Life Insurance Corporation of India have agreed to grant loans to Municipalities for their Water Supply and Drainage Schemes subject to the following conditions:—

(i) The Municipality to find from its own resources and/or by subvention or loan from the State Government at least 331/3 per cent of the cost of the Water-Supply and Drainage Scheme.

(ii) The loan from the Corporation will not exceed 66 2/3 per cent of the cost of the scheme.

(iii) The loan will be guaranteed as to payment of interest and repayment of principal, by the State Government.

(iv) Interest will be charged at the rate of 6½ per cent per annum, payable half-yearly.

(v) The loan will be required to be repaid on the expiry of 25 years from the date of drawing the same.

(vi) The Municipality to set up a Sinking Fund by setting apart annually such sum as would enable the loan to be repaid at the end of 25 years. The amount to the credit of the Sinking Fund should be invested in Central Government Securities.

இந்த விதிகளின்படி L.I.C. கடன் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, in view of the importance of the Drainage Scheme for the Madurai City because it is practically one-third of the Madras City, will the Hon. Chief Minister or the Health Minister come forward to give us some assurance in this House that this scheme will be taken up immediately or in the near future ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : *கனம் உறுப்பினருடைய கருத்தை மனதில் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.*

திரு. என். சங்கரய்யா : *உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாநிலத்தில் இரண்டாவது பெரிய நகரம் மதுரை மாநகர். அந்த நகரின் பாதாள சாக்கடை விஸ்தரிப்புத் திட்டத்திற்கு, எல்.ஐ.சி.யின் நிபந்தனைகளின் அடிப்படையில் உதவி கோரி நகர சபை ஏற்பாடு செய்தால், அதை அரசாங்கம் சாதகமாகப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : *எல்.ஐ.சி.யின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மதுரை நகராட்சி கடன் கோர முன்வருமானால், அது அனுதாபத்தோடு அரசாங்கத்தால் பரிசீலிக்கப்படும்.*

திருமதி கே. பி. ஜானசியம்மாள் : *தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தை வார்டுகளில் முழு அளவில் செய்யாவிட்டாலும், பகுதி பகுதியாக, பாக்கெட் ஸ்கீம் என்ற முறையில் விஸ்தரிக்க, அப்படி அனுமதிக்க சர்க்கார் முன்வருமா ?*

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : *கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து, பரிசீலனை செய்யப்படும்.*

மாணபுமிகு துணைப் பேரவைத் தலைவர் : வினுக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்பு தீர்மானம்.

தீ விபத்தினல் பாதிக்கப்பட்டவர்களின் மறு சீரமைப்பும் துயர் தீர்க்கும் நடவடிக்கைகளும்.

மாணபுமிகு துணைப் பேரவைத் தலைவர் : *திரு. ஹாண்டே அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர விரும்புகிறார்கள். அவர் அறிவிப்பு கொடுத்திருக்கும் தீர்மானத்தைப் படிக்க அவர்களுக்கு அனுமதி கொடுக்கிறேன்.*